நாள்.13.03.2026

அசல் வழக்கு எண். 111/2015

பி.வா. சா.1

பெயர். பகவதி

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விவரம் தெரியும் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரைக்கு விவரம் நான் சொன்னேன் என்றால் சரிதான். வாதி எந்த இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என எனக்கு தெரியும் என்றால் சரிதான். தேவநல்லூர் கிராமம், அயன் நத்தம் சர்வே எண் 1139/15 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண் 1139/15 க்கு எனக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல என் பத்திரத்தில் சர்வே எண் 1078/6 என்று உள்ளது. சர்வே எண் 1078/6 சொத்து எந்த வருடம் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சின்னத்துரை என்பவரிடமிருந்து 2007 ல் கிரையம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 மேற்படி கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

எனக்கு கிரையம் கொடுத்த சின்னத்துரைக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, தபசில் சொத்தில் அருகில் உள்ள வீட்டில் அவர் தான் குடியிருந்தார். 2007 ல் கிரையம் பெற்ற பிறகு எனது பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான், வாங்கவில்லை. பி.வா.சா–ஆ 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் சர்வே எண் 1078/6 சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 1139 ல் நான் எந்த கிரையமும் பெறவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்தார் என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை விவரத்தை எனது வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அந்த அறிக்கைக்கு ஆட்சேபனை எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிக்கையில் வழக்கு சொத்து சர்வே எண் 1139/15 பி ல் உள்ளது என தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தில் தான் என்னுடைய வீடு உள்ளதாக ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் கதவு எண் 9 என்றால் சரிதான். மின் இணைப்பு எண் 634 என்றால் சரிதான். வாதி 2015 ல் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் வீட்டை கட்டினேன் என்றால் சரியல்ல நான் கட்டும் பொழுது தான் வழக்கு தாக்கல் செய்தார்.

நான் வீடு கட்ட ஆரம்பிக்கும் பொழுதே வாதி வழக்கு தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 4 வரைபட அனுமதிக்கான மனு 05.10.2015 ல் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதிலும் அனுமதி சர்வே எண் 1078/6 என்பதற்கு தான் பெறப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தான சர்வே எண் 1139/15 ல் வீடு கட்டுவதற்கு அனுமதி எதுவும் நான் பெறவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 1139/15 க்கு நம்பி வேலாளார் பெயரில் தான் தற்போது வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்படி நம்பி வேலாளரிடமிருந்து தான் 1 ம் வாதி 22.02.2008 ல் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

நான் கிரையம் பெற்ற சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்ற சின்னத்துரை என்பவருக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல. வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தபசில் சொத்தில் நான் கட்டுமானம் கட்டியுள்ளேன் என்றாலும்அதை அப்புறப்படுத்தி கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்தின் நீள, அகலம் என்னவென்றால் நீளம் 22 அடி, அகலம் 17 அடி ஆகும். நான் மேற்சொன்ன அளவுகள் தான் என்னுடைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சட்டவிரோதமாக வழக்கு சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் வாதி கேட்கும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.